# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

**M.C. No. 7/2024**

Name : ரவிச்சந்திரன் Date : 16.05.2025

Father Name : காசிநாதன் :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. சாட்சியம் சொல்வதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. மனுதாரர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். மனுதாரருக்கும் எனக்கும் என்ன உறவுமுறை என்றால் இருவரும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்க்கிறோம். மனுதாரருக்கு நான் சகோதரர் இல்லை நண்பர் தான்என்றால் மனுதாரர் என்னை அண்ணன் என்று தான் அழைப்பார். மனுதாரரின் உடன்பிறந்தவர்கள் ஒரு சகோதரன் மற்றும் ஒரு சகோதரி ஆவார்கள்.

2. மனுதாரருக்கு முதல் திருமணத்தை நான் தான் செய்து வைத்தேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் அவர் முதல் கணவருக்கும் மணமுறிவு ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த வருடம் மணமுறிவு ஏற்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நான் தான் முன்நின்று திருமணம் நடத்தி வைத்தேன் என்றால் சரிதான். மனுதாரருக்கு திருமண முறிவு ஏற்பட்ட விபரம் தெரிந்து தான் எதிர்மனுதாரர் மனுதாரரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் எந்த வருடம் திருமணம் நடந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. மனுதாரரும் எதிர்மனுதாரரும் திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் 4 மாதங்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள். அந்த 4 மாத காலங்களில் நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு எத்தனை முறை சென்று

வந்துள்ளேன் என்றால் ஒரே ஒரு முறை தான் சென்றேன். மனுதாரர் என்னிடம் தொலைபேசியில் அடிக்கடி பேசுவாரா என்றால் அவரது திருமணத்திற்கு பிறகு 2 முறை தான் பேசினார். நான் மனுதாரரின் வீட்டிற்கு அடிக்கடி செல்வேன் என்றாலும் மனுதாரரிடம் அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுவேண் என்றாலும் அது எதிர்மனுதாரருக்கு பிடிக்காமல் மனுதாரரை கண்டித்ததால் தான் மனுதாரர் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்றார் என்றால் சரியல்ல. மனுதாரரை ஆடி மாதத்திற்கு அழைத்து வர நானும் மனுதாரரின் அப்பாவும் சென்றோம் என்றால் சரிதான். நீங்கள் ஏன் வந்தீர்கள் என் எதிர்மனுதாரர் என்னை கேட்டாரா என்றால் இல்லை. பத்து நாட்களுக்கு முன்பு ஏன் வந்தீர்கள் என்று தான் கேட்டார். அதனால் நான் எதிர்மனுதாரரை தகாத வார்த்தைகளால் திட்டினேன் என்றால் சரியல்ல.

4. எதிர்மனுதாரர் நன்னிலம் அனைத்து மகளில் காவல் நிலையத்தில் மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டும் என கோரி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மனுதாரரை சேர்ந்து வாழக்கோரி எதிர்மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பு மனுதாரருக்கு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு மனுதாரர் பதில் அறிவிப்பு கொடுத்தார் என்றால் இல்லை.

5. ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். அந்த பஞ்சாயத்தில் மணமுறிவு ஒப்பந்தம் எழுதிகொள்ள பட்டது என்றால் மனுதாரரை மிரட்டி வாங்கிகொண்டார்கள். மனுதாரரை மிரட்டி எழுதிவாங்கவில்லை என்றாலும் மிரட்டி எழுதி வாங்கியதாக இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு முடக்குவாதம் இருந்ததை மறைத்து எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்று எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் திருமணத்திற்கு முன்பே சொல்லிவிட்டேன்.

6. நான் மனுதாரருக்கு வேண்டபட்டவர் என்பதால் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்சமயம் மனுதாரர் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். மனுதாரர் கோரிய பரிகாரம்

மனுதாரருக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.